REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 101

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

THE "NAM NADU" A TAMIL DAILY THE OFFICIAL ORGAN OF THE D. K. F.

சந்தா விகிதம்:
1 வருடம் ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
[illegible]

சென்னை: புரட்டாசி 23உ வெள்ளி (9—10—53) ★ ★ ★ வெளியூர்: புரட்டாசி 24உ சனி (10—10—53)

"உயர் பார்ப்பனக் குடும்பங்களில் மங்கோலிய-நீக்ரோ முகங்கள்!"

—(:)—

ஆங்கிலோ இந்தியரைப் போல் கலப்பு ஜாதி என ஆச்சாரியார் அறிவிப்பு

— (0) —

சிறிய வகுப்பு—ஆதிக்கமோ பெரிது! அனுபவிக்கும் வளமோ அதனினும் பெரிது!

'சிறந்தவர்கள்' என்று கருதப்படும் பார்ப்பனர்கள் கொண்டுள்ள ஜாதி ஆணவம்

[சென்னை எழும்பூர் வெள்ளை மாளிகையில் 7—10—53 மாலை நடைபெற்ற ஆங்கிலோ—இந்தியர் கூட்டத்தில், சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் கலந்துகொண்டு, சிலபல கூறியுள்ளார்கள். அதில் சாரமான சில பகுதி இங்கு தரப்படுகிறது.]

சிறிய வகுப்பு— ஆதிக்கமோ பெரிது!

"உங்கள் வகுப்பைப்போல் ஒரு சிறு வகுப்பைச் சார்ந்தவன்தான் நான்; காங்கிரசிலுள்ள, அல்லது சட்ட சபையிலுள்ள ஒவ்வொரு கட்சி அங்கத்தினரும், ஒரு குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர் என்ற எண்ணம் இருப்பதால், அவர்களும் உங்களைப் போல ஒரு சிறுபான்மை வகுப்பினராகவே நினைக்கின்றனர்."

கலவை ஜாதி!

"கலவை ஜாதியென்று ஸ்ரீ ஹாயில் குறிப்பிட்டார். இந்தியாவில் யார்தான் கலப்பு ஜாதி இல்லை? ஒருவர் கலப்பு ஜாதி, மற்றவர் கலப்பற்ற ஜாதி என்று நினைப்பதெல்லாம் மடமை. இந்தியாவிலுள்ள மக்கள் எல்லோரும், கலப்பு வர்க்கத்தைச் சார்ந்தவர்களே!"

சில பார்ப்பன குடும்பம்

'சில உயர்தர பிராமண குடும்பங்களில், மங்கோலிய அல்லது நீக்ரோ வகுப்பினருடைய முகச் சாயல்களைப் பார்த்திருக்கிறேன். இந்தியாவில் வாழ்ந்த எல்லா மக்களுக்கும் ஜாதி கலப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆயிரக் கணக்கான வருஷங்களில் இம்மாதிரி கலப்பு ஏற்படுவது இயற்கையே; ஆதலின் என்னைவிட நீங்கள் அதிகமாக கலப்பு ஜாதியினர் என்று நினைக்க வேண்டாம்."

சுய அனுபவம்!

"உதவிசெய்வதாயிருந்தால் நெருங்கியவர்களுக்குத் தானே உதவி செய்ய முடியும்? ஆதலின் முதலியார்கள் அல்லது நாயுடுமார்கள், நாயக்கர்கள், யாராயிருந்தாலும் தங்கள் ஜாதிக்கு உதவ வேண்டுமென்று கூறுகிறேன்."

பார்ப்பனர் புரியும் தவறு!

"பிராமணர்களிலும் பல்வேறு பிரிவினைகள் இருக்கின்றன. இதர விஷயங்களில் மிகவும் சிறந்தவர்கள் என்று கருதப்படுபவர்கள், இந்த ஜாதி விஷயத்தில் தவறு செய்து கொண்டிருப்பதனால் நாட்டின் முன்னேற்றத்துக்கு தடங்கலாய் இருக்கின்றனர்."

விசுவாசமுள்ள ஜாதி!

"இதர சில வகுப்பினர்களிடமிருந்து, அதிகமான விசுவாசத்தை சர்க்கார் கோர முடியும். ஆனால், அவர்கள் கொடுப்பதில்லை சர்க்காரிடம் விசுவாசம் சம்பந்தப்பட்ட வரை, உங்கள் ஜாதி முதல் ஸ்தானம் பெற்றிருக்கிறது. சர்க்கார் உங்களுக்கு என்ன செய்திருக்கிறது? வெகு சொற்பம் என்று நினைக்கிறேன்"

அன்றும் அடிமை! இன்றும் அடிமை!

"கட்டுப்பாடு உணர்ச்சி உங்களிடம் அதிகம்; அதனால்

(3-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★

கல்லக்குடி அறப்போர்

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, இராம. சுப்பையா, மற்றும் தோழர்கள் சிறையில்,

இன்று 89-வது நாள்

★★★★★★★★★★★

கருப்புக் கொடி காட்டிய தோழர்கள் தாக்கப்பட்டனர்

போலீஸ் ஸ்டேஷனில் பட்டினியும் போடப்பட்டனர்

கோவைப்பகுதியில் அடக்குமுறை கோரதாண்டவம்

கோவை, அக். 6—

கோபி, சத்தி, புளியம்பட்டி, தொட்டம்பாளையம் ஆகிய தி.மு. கழகங்களைச் சேர்ந்த செயல் வீரர்கள் கோபி தோழர் ஜி. என். ராசு அவர்கள் தலைமையில், சென்ற 4—10—53-ல் பவானி சாகருக்குவந்த இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதமர் நேருவுக்கு கருப்புக்கொடி காட்டுவதற்காக, அன்று பகல் 2 மணிக்கு புளியம்பட்டி தி. மு. கழகக் கட்டடத்திலிருந்து புறப்பட்டார்கள்.

நேரு வரும்நேரம் ஆக ஆக, போலீசார் பொது மக்களையெல்லாம் சோதனை போட ஆரம்பித்தும், கருப்புக்கொடி காட்டவந்த தோழர்களை, காடு, மலையெல்லாம் தேடுவதற்கும் புறப்பட்டனர்.

நம் முன்னணி வீரர்கள், பவானிசாகருக்குப் பக்கத்திலுள்ள பெட்டம்பாளையம் என்ற ஊர் பகுதி வந்து சேரும்போது, திடீரென லாரி சகிதம் வந்த போலீசார், தோழர்கள் கோபி ராசு, சிவக்கொழுந்து, சாமிநாதன் ஆகியோரைக் கைது செய்து லாரியில் ஏற்றிக்கொண்டனர்.

எதிர் நோக்கிற்றுள், மற்றும் 58 தொண்டர்களை லாரியில் ஏற்றினார்கள். "நேருவே திரும்பிப் போ; காங்கிரசை வாபஸ் வாங்கு," என்ற பெரும் ஒலி முழக்கத்துடன் லாரிகள் இரண்டும் புறப்பட்டது.

இதற்கிடையில் நேருவும் பவனி வந்தார்; உடனே கழகத் தோழர் கட்பையா தனியாக நின்று நேரான நேருவின் மோட்டாருக்கருகில் சென்று, கருப்புக்கொடி காட்டி, "நேருவே திரும்பிப் போ," என்ற ஒலியை எழுப்பினர்.

உடனே போலீஸ் இன்ஸ்பெக்டர் அவரைத் தடியால் தாக்கி, தப்புறப்படுத்திக் கைது செய்தார். பிறகு அவரையும் லாரியில் ஏற்றினார்கள்.

தொண்டர்களை மேட்டுப்பாளையம் போலீஸ் ஸ்டேஷனில் 4—10—53 பகல் இரண்டரை மணியிலிருந்து 5—10—53 இரவு முழுதும் உணவுகூட கொடுக்காமல், தண்ணீர் வசதிகூட இல்லாமல் காவலில் வைத்திருந்தார்கள். பிறகு இரவு இரண்டு மணிக்கு விடுதலை செய்து, ஊருக்குள் விடாமல் அப்புறப்படுத்தினார்கள். விடுதலையடைந்த கழக வீரர்கள் கால் நடையாகவே புறப்பட்டு, வேமன் கடந்து சிறுமுகை என்ற கிராமம் வந்து சேர்ந்திருக்கின்றனர். (ந—ர)

கைகளில் விலங்குடன் தூத்துக்குடி தோழர்களை மன்றத்திற்கு அழைத்து வந்த அக்கிரமம்!

இரு கை நீட்டி—'அப்பா' என்று மழலைமொழி இசைத்த குழந்தையை எடுத்து முத்தமிட முடியாத சோகக் காட்சி

ஆச்சாரியார் அடக்குமுறை ஆட்சியின் அகோரம்!

நெல்லை, அக். 9—

கைதியாகிக் காட்சியளித்த தோழர்களின் குடும்பமே அங்கு வந்திருந்தது; ஆசைக் குழந்தைகளையும், அன்பு மனைவியரையும், பாசமுள்ள தாய்மாரையும் கண்ட நமது தூத்துக்குடி தோழர்கள்: சிறையில் அடையும் துன்பங்களையெல்லாம் மறந்ததுபோல் காட்சியளித்தனர்.

சின்னஞ் சிறு குழந்தை; தன் தாயின் இடுப்பிலிருந்து, 'அப்பா' என்று தாவிக் குதித்தது; ஆனால், தந்தையான நமது கழகத் தோழரோ, குழந்தையை எடுத்து முத்தமிட முடியவில்லை. காரணம், அவருடைய கை, இன்னொரு தோழரின் கையோடு விலங்கினால் பிணைக்கப்பட்டிருந்தது.

சதி வழக்கு ஜோடிக்கப்பட்டு, அதன் காரணமாகக் கால வரையறையின்றி சிறையிலே தள்ளப்பட்டுக் கிடக்கும் தூத்துக்குடி கழகத் தோழர்கள், 6-10-53 அன்று காலை, சாத்தான்குளம், மதுரை, திருச்செந்தூர், விளாத்திகுளம் ஆகிய சிறைச்சாலைகளிலிருந்து நெல்லை நீதிமன்றம் வந்து சேர்ந்தார்கள். போலீஸ் காரில் அவர்கள் வரும்போதே "திராவிடநாடு திராவிடருக்கே; சதி வழக்கை வாபஸ் வாங்கு" என்ற முழக்கங்களுடன் வந்தனர்.

பாளையங்கோட்டை ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து தோழர் கே. வி. கே. சாமி அவர்களும் வந்து சேர்ந்தார்.

விளாத்திகுளம் சிறையில் வைக்கப்பட்டிருக்கும் தோழர்களான தங்கப்பழம், சிவசாமி, என். நடராசன் ஆகியோர் பிரத்தியேக போலீஸ் பாதுகாவலுடன் நெல்லை வந்து சேர்ந்தனர்.

குற்றஞ் சாட்டப்பட்ட 96 தோழர்களும் ஒரே இடத்தில் அமர்த்தப்பட்டனர்.

தூத்துக்குடியிலிருந்து தோழர்கள் ரத்தினம், தாவமுத்து, மற்றும் பலர் நமது தோழர்களைக் காண வந்திருந்தனர். தோழர்கள் அத்தனை பேரும் உற்சாகத்துடனுரை

(8-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஐவர் சிறையில்!
இன்று
39-வது நாள்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

சென்னை : 9—10—1953 வெள்ளி

சாணக்கியர்!

(5)

உடைந்துபோன வாழ்வை உருவாக்க, ஏதாவது சிற ஆதரவு தேவை என்று, காங்கிரஸ் ஊழியர்கள் கொண்டுள்ள விருப்பத்தை, ஊழியர்கள் தேசத் தொண்டுக்காகக் 'கூலி' கேட்கிறார்கள் என்று, அவர்களின் கோரிக்கைக்கு இழிவான பொருள் கற்பித்து, ஊழியர்களை, பொதுமக்களுக்கு முன் விகார வர்ணம் பூசி, காட்டிவிட்டார் அன்பர் ஆச்சாரியார்.

ஊழியர்களை முகஸ்துதி செய்து, வானுயரத் தூக்கி வைத்துப் புகழ்ந்து, 'மதிப்பு' என்ற சொல்லைப் போட்டுப் பசப்பி, ஊழியர்களின் குறைபாட்டுக்குத் தடை விதிக்க ஆச்சாரியார் முயன்றிருக்கிறார்.

இது எப்படியோ போகட்டும், இது அவர்கள் குடும்ப ரகசியம்!

காந்தீயத்தை, சிலந்தது சித்திரவதை செய்து, பிணமாக்கிப், பூப்பல்லக்கில் வைத்து, ஊர்வலமாகத் தூக்கிச் சென்று, ஆழக் குழி தோண்டிப் புதைத்துவிட்ட அக்கிரமப் பணியை வெற்றிகரமாகச் செய்து முடித்தவர்கள் காங்கிரசிலுள்ள முன்னணித் தலைவர்களேயாவர். இந்த அநீதியை காங்கிரஸ் ஊழியர்களில் சிலர் செய்திருந்தபோதிலும், அப்பழிக்கு பலியாகாமல் பெரும்பாலோர் இன்னும் காங்கிரஸ் ஊழியர் பட்டியலில் உள்ளனர் என்பதை நாம் அறிவோம். இவர்களுடைய தூய சிந்தனையாலும், புனிதமான சேவையினாலுந்தான் இன்னும் காங்கிரசுக்குப் பொதுமக்களிடம் கொஞ்ச நஞ்ச மதிப்பு இருந்துவருகிறது. வெறும் வரலாற்றுச் சம்பவமாகப் போய்விடாமல், காங்கிரஸ் கட்சியைப் பாதுகாத்து வருகிறவர்கள் இந்த நற்பண்பு கொண்ட காங்கிரஸ் ஊழியர்களேயாகும் என்பது மிகையாகாது. அதற்கும் உலை வைக்க ஆச்சாரியார் கங்கணங் கட்டிக்கொண்டுவிட்டார்.

இந்த மாநிலத்தில் மட்டுமல்லாமல், எல்லா மாநிலங்களிலும் நடைபெற்றுவருகிற காங்கிரஸ் ஆட்சியின் பலனாகவும், இந்திய யூனியன் ஆட்சியின் விளைவாகவும், பொதுமக்களின் வெறுப்பை வேண்டிய அளவிற்கு, ஆட்சிபீடமேறிகள் காங்கிரசுக்கு சொத்தாகச் சேர்த்திருக்கிறார்கள்.

பதவி பெற்றவர்கள், பொதுமக்களின் துன்பங்களைத் துடைப்பதற்குப் பதிலாக, துன்பங்களை ஒன்றுக்குப் பலவாக பொதுமக்கள் மீது சுமத்தினர். வறுமையைப் புகுத்தினர். பஞ்சம் பட்டினியைப் பெருக்கினர். எந்த கோணத்திலும் 'இல்லாமை' என்ற அழுகுரல் ஒவ்வொரு நிமிஷமும் கேட்டுக்கொண்டே இருக்கிறது.

பொதுவாகக் கோலோச்சுகள் அனைவர் காதுகளிலும் இந்த அவலச்சொல் விழுந்ததாகத் தெரியவில்லை. குறிப்பாக ஆச்சாரியார் விஷயத்தில, பொதுமக்களின் இன்னல் வெறுங் காட்டுக் கூச்சலாகவே கேட்டுக்கொண்டு இருக்கிறது. பரிகாரம் தேடவேண்டிய பொறுப்பும், கடமையும் கொண்டுள்ளவர் பொதுமக்களின் விருப்பத்தை, எதிர்ப்பை அடக்குமுறை கொண்டு அடக்கி நிர்மூலமாக்கி விடலாம் என்று முனைந்து இருக்கிறார். அந்த அதிகார இபலலைப நடைமுறையில் காட்டியும வந்திருக்கிறார்.

கடவுள் கதை படித்து, நாட்டு மக்களின் எதிர்ப்பு உணர்ச்சியை, வேறு பக்கம திருப்பலாம் என்று தந்திரப் பணியில் தினம் தினம் ஈடுபட்டு வருகிறார். திராவிட இயக்கத்தவர்கள், கடவுளை கப்பலேற்றி விடுகிறார்கள் என்று, ஆச்சாரியார் சர்க்காரிடம் மக்கள் கொண்டுள்ள அதிருப்தியையும் ஆத்திரத்தையும், ஏமாற்றத்தையும் எரிச்சலையும் திராவிட இயக்கத்தவர்மீது மோதவிட முயன்று வருகிறார். ஆச்சாரியார் எதிர்பார்த்தபடி வெற்றி கிட்டவில்லை. இதில் ஆச்சாரியார் ஏமாற்றம் அடைந்து வருகிறார்.

இதுதான், அவருடைய கடவுள் பிரசாரத்தில் அமைந்திருக்கிற உண்மை ஆச்சாரியாரைப பொறுத்தவரையில், 'பழுத்த நாத்திகர்' என்று குறிப்பிடுவதற்கு இடமிருந்தாலும இல்லாமற் போனாலும், 'கவலையற்றவர்' என்பது முக்காலும உண்மையாகும.

ஆச்சாரியார் சர்க்கார் மீது பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பும்—வெறுப்பும், ஆச்சாரியார் சர்க்கார் கருவுக்குள் ஜனித்தவைகளேயாகும். பொது மக்களின் வேலை இன்மை, பசிக் கொடுமை, வரிச் சுமை, வளைந்த வாழ்வு, துன்ப நிலை, இவ்வளவையும், அலட்சியம் என்னும் வித்திட்டு, அடக்குமுறை என்னும் எருவிட்டு, பூர்வ பெருமை என்னும் தண்ணீர் பாய்ச்சி, ஆச்சாரியார் சர்க்கார் வளர்த்து வருகிறது நாட்டில்.

வயிறு நிறைய உண்ட குழந்தையைத் தொட்டிலிலிட்டு, தாலாட்டு கூறினால் குழந்தை விரைவில் தூங்குவது இயல்பு. பசித்தக் குழந்தையை, தொட்டிலில் படுக்க வைத்து, தக்கப் பக்கமேளங்களுடன், தாளம் தவறாமல், தாலாட்டுப் பாடினாலும், குழந்தை கண் அயருமா? சில நிமிஷம் மருட்சி கொண்டு இருக்கும்; பின்னர் முன்னிலும் வீறு கொண்டு அலறி அழும்! ஆச்சாரியாருக்கு இது தெரியாதா? தெரியும்! பக்கத்திலே உள்ள பாதுகாப்புப் படை, பசித்த மக்கள்மீது அந்தப் படையை ஏவ அவருக்குள்ள அதிகாரம், அர்த்தமற்ற ஆட்டங்களை எல்லாம் ஆடச் சொல்லுகிறது ஆச்சாரியாரை!

தனது பாட்டிக் கதை, குட்டிக் கதை ஆகியவைகளால் எல்லாம் திருப்திக்கொள்ளாத மக்களைக் குறித்து அவர் எண்ணும்பொழுதெல்லாம், பொதுவாக திராவிடர் இயக்கமும், வேகமாக வளர்ந்துவருகிற நமது தி. மு. கழகமும் அவருடைய கண்களில் இமயம்போல் எழுந்து நின்றிருப்பதைக் காண்கிறார். அவர் உள்ளத்தில் எரிச்சல் இடம பிடித்துக் கொள்ளுகிறது. ஆக்கிரம், ஆவேச உணர்ச்சிகளுக்கு அவர் அடிமைப்பட்டு விடுகிறார் அதிகாரம் பெற்றோர் ஆளான அவதிகளெல்லாம் ஆச்சாரியாரும் உள்ளாகி, கண்ணை உருட்டிப் பார்க்கிறார். அச்சுறுத்தியும், நச்சுரை செப்பியும் நாசத்தை நோக்கி நடை போடுகிறார்.

இமயம்போல் எழுந்து நிற்கும் தி. மு. கழகத்தை, ஆச்சாரியார் கல்லக்குடியிலும், தூத்துக்குடியிலும் தனது படையை ஏவி, துப்பாக்கிக் கொண்டு சுட்டுப் பார்த்தார்! செயல் வீரர்கள் அனைவரையும் தடி கொண்டு தாக்கிப் பார்த்தார்! சிறையில் தள்ளிப் பூட்டிப் பார்த்தார்! தி மு கழகம கம்பீரமாக, அடக்குமுறைக்கு ஆளானதற்கு முன்பிருந்த நிலையைக் காட்டிலும, தரத்திலும, அளவிலும வேகமாக வளர்ந்து வருவதைக் கண்ணுற்றார்! அறப்போர் படைவரிசை, ஒன்று பலவாகிப் பெருகிக்கொண்டு வருவதைப் பார்த்தார்—பார்க்கிறார். பதட்டம் பிறக்கிறது! கோபம் கொந்தளிக்கிறது!

காங்கிரஸ் ஊழியர்களிடம் அடைக்கலம் புகும் கட்டத்திற்கு வந்திருக்கிறார் இறுதியில். இதுதான் உண்மை. ஆச்சாரியார், எதிர்க்கட்சியினரைத் தாக்க, காங்கிரஸ் ஊழியர்களை ஏவி விடுவதில் உள்ள ரகசியம் இதுதான்.

இந்த ஏவுதலுக்கு சிலபல காங்கிரஸ் தொண்டர்கள் பலியாகியும் இருக்கிறார்கள். இதைக் கண்டு நாம் ஆதங்கப்படவில்லை, அருவருப்பும் அடையவில்லை, கண்டிக்கவும் விரும்பவில்லை. காரணம்?

ஆச்சாரியார் சொல் கேட்டு, கொலை வினையில் ஈடுபட்டு, மனமொப்பிப் பேயாட்டத்தில் குதிப்பதற்கு, காங்கிரஸ் ஊழியர்களில் விரல் விட்டு எண்ணக் கூடிய 'களபதிகளே' உள்ளனர் என்பதை நாம் நன்கு அறிவோம். அவர்கள் 'களபதிகள்! காந்திய அறப்போர் தளபதிகள் அல்லர்! அவர்கள் சமுதாய எதிரிகள்! அவர்களை நாம கண்டிப்பது வீண் வேலை!

ஆச்சாரியாரின் தூபத்திற்கு, காந்தீய அகிம்சா அறப்போர் படையினர் செவி சாய்க்கமாட்டார்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை நமக்கு உண்டு. அவர்கள் நல்லவர்கள். தூய உள்ளம் கொண்டவர்கள். புனித சேவையில் முன்னாள் ஈடுபட்டுள்ளவர்கள். அவர்களா காங்கிரஸ் 'களபதிக'ளின் சேவைக்கு அரணாக இருப்பார்கள்? ஒருக்காலும் இருக்கமாட்டார்கள்.

பொதுவாக திராவிட இயக்கத்தையும், குறிப்பாக நமது தி. மு. கழகத்தையும், காங்கிரஸ் ஊழியர்களை விட்டுத் தாக்க வேண்டுமென்ற நச்சு நினைப்புடன் ஆச்சாரியார் கூறுகிறார்!

1. "திராவிட இயக்கத்திற்கு இனி சமாதானம் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.
2. "திராவிட கிளர்ச்சிக்குக் காரணமாயுள்ள ஆணிவேரை பிடுங்கவேண்டும்.
3. "தேசத்தைக் கெடுக்க திராவிட இயக்கத்திற்கு இனி இடந்தரலாகாது.
4. "காங்கிரஸ்காரர்களும் திராவிட இயக்கத்தவர்கள் மாதிரி பேசுவதில் இறங்கக் கூடாது அதனால் பலனில்லை
5. "திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் அல்லது பின்னேற்றக் கழகம ஆகிய கட்சிகளை, நீங்கள் இனி நன்றாகக் கவனித்துக்கொள்ள வேண்டும்
6. "கவனித்துக்கொள்ள வேண்டுமென்றால் கிராம பாஷையில் அதற்கு அர்த்தம் கொள்ளவேண்டாம் திராவிட இயக்கத்தவருக்கு பலம் அதிகரிக்காமல் திராவிட இயக்கத்தவரின் நடவடிக்கைகளை அடக்க போராட்டம் செய்ய வேண்டும்.
7. "இனி திராவிட இயக்கத்தவர்தான் முதல் எதிரி.
8. "இனிமேல் தமிழ்நாடு சந்தோஷமாக இருக்கவேண்டுமானால், திராவிட துவேஷக் கட்சியை ஒழித்து கணக்குத் தீர்த்து, அந்தப் புஸ்தகத்தை மூட்டை கட்டி வைத்துவிட வேண்டும்.
9. "திராவிட இயக்கத்தவர் செய்கை இனி சரித்திரத்தில் தான் காணும்படி செய்யவேண்டும்.
10. "இனிமேல் அந்த நிகழ்ச்சி ஏற்படாது என்கிறவரை, ஊழியர்களாகிய நீங்கள் வேலை செய்யவேண்டும்."

காந்தீயக் கொள்கையிலிருந்து இன்னமும் வழுவாது இருக்கும் கண்ணியமுள்ள காங்கிரஸ் ஊழியர்களே; காந்தீய அகிம்சா நெறியை மனப்பாடம் செய்துள்ள, பண்புள்ளம் பெற்ற அறப்போர் வீரர்களே, ஆச்சாரியார் கதர்க் கொடி ஏந்திய உங்கள் கரங்களிலே குறுந்தடி ஏந்தச் சொல்கிறார்; கைராட்டைச் சுற்றிய கரங்களிலே கொடுவாள் தூக்கச் சொல்லுகிறார்; வெள்ளை ஏகாதிபத்திய வெறியர்களின் மிருகச் செயலுக்கு மார் காட்டி நின்று, தியாகத் தழும்புகளை தேகத்தில வடுக்களாகப் பெற்றுள்ள உங்களை, மாற்றுக் கருத்தினர்களின் மண்டைகளை உடைக்க ஏவுகிறார், காங்கிரஸ் ஊழியர்களே, இதை நீங்கள் ஒப்புகிறீர்களா? உங்களுக்குச் சம்மதந்தானா இது! நீங்கள் ஆச்சாரியார் கட்டளைப்படி நடக்க முனைவதாக இருந்தால், உலக உத்தமர் காந்தியாரின் வாழ்க்கையை, ஒரு முறைக்குப்பலமுறை படித்துவிட்டு. ஆச்சாரியார் கூறும் கொலைவிளையை மேற்கொள்ளுங்கள், நாம் வேண்டாம், என்று சொல்லவில்லை.

ஊழியர் மாநாட்டில், ஊழியர்களை 'ஏணி' 'தோணி' என ஒப்பட்டு ஊழியர்களில் ஒருவர் பேசியது ஆச்சாரியாருக்கு எரிச்சலை கொடுத்திருக்கிறது. எனவே, ஊழியர் கூறின உவமையை மறுத்து, அவர் வேறு ஒரு உவமையைக் கூறி இருக்கிறார். அது இது.

"வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஏணி, தோணி என்று உயிர் இல்லாததைக் குறிப்பிட்டார். நான் உயிர் இருப்பதைச் சொல்கிறேன்—நெல் பயிர், சோளப் பயிர் என்று போடுகிறோம். கதிர் ஏற்பட்டவுடன் சொந்தக்காரர்கள் அதை அறுத்தெடுத்துக் கொண்டு போய் விடுகிறார்கள், பயிர் கட்டை மாட்டுக்குத் தீனியாகப் போகிறது. சோளத்தட்டு, நெல் வைக்கோல் அதற்கு மேல் பிரயோஜனமில்லை. இது இயற்கை விதி. ஊழியர்கள் இந்த சோளத்தட்டு, நெல் வைக்கோல் போல இருப்பதற்கு வருத்தப்பட்டு என்ன பயன்? நெல் பயிராக இருக்கும்போது, கதிர் விடும்போது எப்படி பயிர் தள தளவென்றிருக்கிறது. அப்படி ஊழியர்கள் தள தளவென்று பிரகாசித்தார்கள். பயிர் முற்றி, கதிர் விட்டபின்னர் பயிர் மாட்டுக்குத்தான் தீனியாகப் போகிறது. ஊழியர்களை யாரும் கவனிக்காமல் மறந்துவிடவில்லை."

'தினமணி' 3—10—53

'ஊழியர்களை யாரும் கவனிக்காமல் மறந்து விடவில்லை' என்று சுட்டிக் காட்டி, ஊழியர்களை தி மு. கழகத்தின்மீது ஏவி விடுகிறார் ஆச்சாரியார்.

தி. மு கழகத்தினை ஒழித்துக கட்டுவது, ஒடுக்கி விடுவது. ஆணி வேரைப் பிடுங்குவது' என்றெல்லாம் ஆச்சாரியார் கூறுவதற்குள்ள உண்மையான பொருள், எதிர்ப்பு காட்டும் ஏழை மக்களை அடக்கி ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதேயாகும்.

அதிகாரம கொடுத்துள்ள மலபார் போலீசுடன், ஆயுதம் தரித்த போலீஸ் படை, பொதுமக்களை ஒரு பக்கம் தாக்கவும், காங்கிரஸ் ஊழியர் படை மற்றொரு பக்கம் தாக்கவும், காட்டிக் கொடுக்கவும் ஆன பாசீசத் திருவிளையாடலை பொதுமக்கள்மீது கட்டவிழ்த்துவிட ஆச்சாரியார் திட்டமிட்டு இருக்கிறார். 'மக்கள் உரிமை,' 'மக்களாட்சி முறை' என்ற உயர்ந்த கோட்பாடுகளை, பசித்த மக்கள் முன்பு பேசுவதினால், பயன் விளையாது என்ற திட்டவட்டமான முடிவிற்குக் காங்கிரஸ் தேசியம வந்துவிட்டு இருக்கிறது. காங்கிரஸ் தேசியத்தின் முதற் கட்டம் முடிந்துவிட்டது. இப்பொழுது இரண்டாம கட்டத்தில் காங்கிரஸ் தேசியம் கால் வைக்கிறது. எனவே, அதன் கோரத் திருப்பணி இந்த ரூபத்தைத்தான் பெறும். இது வரலாறு.

ஆச்சாரியார் அடக்குமுறை கண்டு, நமது தி. மு. கழகத் தோழர்கள் அஞ்சத் தேவை இல்லை. என்றைக்கிருந்தா

(அடுத்த பக்கம் பார்க்க)

ஜனநாயகம் கேலிக்கூத்தாகிறது

கருப்புக்கொடி காட்டியவர்களுக்கு இருவார சிறை

திருப்பூர், அக். 6—

5—10—53-ல், ஆச்சாரியார், திருப்பூர் வந்து, உணவு விடுதியையும், நகராண்மைக் கழகத்தாரின் வாசகசாலையையும் திறந்து வைத்தார்.

திருப்பூர் நகரக் கிளையின் தீர்மானத்தின்படி ஆச்சாரியாருக்குக் கருப்புக்கொடி காட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. காங்கிரசு ஜனநாயகம் இந்த உரிமையைக்கூடப் பறிக்கும் முறையில், முன்கூட்டியே, செயலாளர் உள்பட 17 இயக்கத் தோழர்களைக் கைது செய்து, காவலில் வைத்துவிட்டு, ஆச்சாரியார் எதிர்ப்பின்றி பவனி வர ஏற்பாடு செய்யப்பட்டது. இருந்தும், இயக்கத் தோழர்களும், அனுதாபிகளும், பலத்த போலீஸ் அடக்குமுறைக்கு இடையே கருப்புக் கொடி காட்டி, "ஆச்சாரியாரே திரும்பிப் போ; புதிய கல்வித்திட்டத்தை வாபஸ் வாங்கு; தலைவர்களை விடுதலை செய்" என்று முழக்கினர்.

போலீஸ், பொதுமக்களையும், இயக்கத் தோழர்களையும் அடித்துக், காயப்படுத்தியது. கொடி காட்டிய தோழர்கள் அண்ணாமலை, ராமசாமி இருவரும் தாக்கப்பட்டார்கள். ஐந்து தோழர்கள் கைது செய்யப்பட்டு, (75-வது செக்ஷன்படி) இரண்டு வாரம் சிறை தண்டனை விதிக்கப்பட்டார்கள்.

தண்டனை அடைந்த தோழர்கள்:— கே. பி. ராமசாமி, ஊ. ப. சண்முகம், எம். எஸ். சரவண முத்து, எம். என். அண்ணாமலை, கே. ராமசாமி.

கழகக் கட்டிடத்தில் முன்கூட்டியே பிற்பகல் 2 மணிக்கு, (151-வது செக்ஷன்படி) கைது செய்து, காவலில் வைத்து, ஆச்சாரியார் சென்றவுடன் இரவு 9 மணிக்கு விடுதலை செய்யப்பட்ட தோழர்கள் வருமாறு:— என். பால்ராசு, கே. பழனிச்சாமி, கா. சு. சேரலாதன், எஸ் டி. மதிவாணன், என. ராமசாமி, பி. என். பொன்னுசாமி ஆவர்.

151-வது செக்ஷன்படி, 2½-மணிக்குக் கழகக் கட்டிடத்தில், கைது செய்யப்பட்டு, இரவு 9-மணி அளவில் விடுதலை செய்யப்பட்ட தோழர்களின் விபரம்:— டி. பி. எஸ். மணி, கே. எஸ் அப்துல்காதர், ஆர் பாலசுந்தரம், கே. பழனிச்சாமி, ஆர். அருணாசலம், எஸ். சிவானந்தம், பி. டி. பெருமாள், இ. எ. மாதர்ஷா, எம். ஆறுமுகம், கே. வீரகேசரி, எஸ். லோகநாதன்.

திருச்சி தோழர்கள் வழக்கு

திருச்சி, அக். 7—

திருச்சி தோழர்கள்மீது தொடரப்பட்டுள்ள வழக்கு, 30—9—53ல் டவுன் பெஞ்சு மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணை செய்தபின், வழக்கம் போல், வழக்கை 6-வது முறையாக 14-10-53ல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தி. மு. கழக செயற்குழு தேர்தல்கள்

★

சென்னை (19வதுவட்டம்)

தி. மு. கழக 19-வது வட்ட செயற்குழு கூட்டம் தோழர் டி. என். சண்முகம் அவர்கள் தலைமையில் 27—9—53-ல், நடைபெற்றது. தோழர்கள் பி. பெருமாள், செ. வில்லாளன், எ. ஏசுதாஸ், பி. வெங்கிடாசலம், ஜார்ஜ், எ. முத்து ஆகியோர் செயற்குழு உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்கள்.

தோழர்கள் இ. பொன்னுசாமி, அர்ச்சுனன், செல்வராஜ் கா. சு. இராமலிங்கம், சம்மந்தம், கங்காதரன், ஏசுதாஸ், முத்து செயராமன், கணேசன், எம். எஸ். மணி, முனுசாமி, தட்சணாமூர்த்தி ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

துணைச் செயலாளர் தோழர் எ. ஆரோக்கியசாமியின் ராஜினாமா ஏற்கப்பட்டு, அவருக்குப் பதிலாக தோழர் கா. சு. இராமலிங்கம் துணைச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

செம்பியம்

27—9—53-ல் நடைபெற்ற தி. மு. கழக கிளைக் கழகத் தேர்தலில் தோழர்கள்: பி. பி. ஏகாம்பரம் செயலாளராகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும், கே சண்முகம் துணைச் செயலாளராகவும் எஸ். செகதீசன் பொருளாளராகவும், டி. எஸ். ஜே. ஆர். பாரதி மாவட்டப் பிரதிநிதியாகவும், கே. பழனிவேல், ஜி. சுப்பிரமணி, அருணாசலம், எஸ். கணேசன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கரூர்

27—9—53-ல், 19-வது வார்டு தி. மு. கழகக் கிளை அமைப்புக் கூட்டம் தோழர் கே. ஆர். நாராயணன் தலைமையில் நடைபெற்ற பொழுது, தோழர்கள் ப. சக்திவேல், செயலாளர்; தி. சின்னசாமி, துணைச் செயலாளர்; சேக் அலி, பொருளாளர்; செயற்குழு உறுப்பினர்கள் என். பொன்னுச்சாமி, எம். இரத்தினம், என். சுப்பையா, எ. சுப்பிரமணியம், ச. ஆறுமுகம், இரா. ரெங்கராசன், ப வேலாயுதம், எம் வி. ராசு, ஆர். மாரியப்பன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

(முன் பக்கத்தின் தொடர்ச்சி)

லும் மரணம் உறுதி.

நமது இதய மூச்சாம் திராவிடநாடு காண, நமது உயிரையும் காணிக்கையாக்குவோம் என்று சூளுரைத்துக் கொள்ளுவோமாக.

காங்கிரஸ் 'களப்திகள்' சிலர், நமது கழகத் தோழர்களை, இப்பொழுதே சிற்சில இடங்களில் தாக்கி வருகின்றனர் என்ற செய்தி, நமக்கு வந்துகொண்டு இருக்கிறது மேலும் இது கூடுதலானாலும், ஆகலாம் அல்லது குறைந்தாலும் குறையலாம். எது எப்படியானாலும், நமது தி. மு. கழகத் தோழர்களும் திருப்பித் தாக்குவது என்ற தீவினையை மேற்கொள்ளக்கூடாது என்று கண்டிப்பாக எச்சரிக்கிறோம். கண்ணியம், கட்டுப்பாடு, அமைதி என்ற நமது கழகத்தின் அடிப்படைகளை கனவிலும் நமது தோழர்கள் மறந்து நடக்கக் கூடாது. நமது பொதுச் செயலாளர் சிறை புகுமுன் கூறியுள்ளதை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள்.

"பலாத்காரத்திற்குத் துளியும் இடம் தராதீர்கள். தாக்கினால் (தாக்குவர்) தாங்கிக் கொள்ளுங்கள்—தாயகத்தின் தளைகளை உடைத்தெறியும் பணியில், ஈடுபட்டுள்ளோருக்கு, இந்த நெஞ்சுரம் நிச்சயம் தேவை."

போனது போக, இனியாவது நல்லியல்புள்ள காங்கிரஸ் ஊழியர்கள், காங்கிரஸ் களபதிகள் ஈடுபடும் கொலை வினைகளைக் கண்டித்து, ஒதுக்கி சாணக்கியரின் சபலத்திற்கு முடிவு கட்டுவார்கள் என்ற நம்பிக்கையோடு இதை முடிக்கிறோம்.

கைகளில் விலங்குகளுடன் ....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யாடிக் கொண்டு, மகிழ்ச்சியோடு காணப்பட்டனர்.

கைதியாகக் காட்சியளித்த தோழர்களின் குடும்பமே அங்கு வந்திருந்தது; ஆசைக் குழந்தைகளையும், அன்பு மனைவியரையும், பாசமுள்ள தாய்மாரையும் கண்ட நமது தூத்துக்குடித் தோழர்கள், சிறையில் அடையும் துன்பங்களையெல்லாம் மறந்ததுபோல காட்சியளித்தனர்.

ஒரே ஒரு காட்சி கூடியிருந்தவர்களின் உள்ளத்தையே உருக்கிவிட்டது.

சின்னஞ்சிறு குழந்தை தன் தாயின் இடுப்பிலிருந்து. 'அப்பா' என்று தாவிக் குதித்தது. ஆனால், தந்தையான நமது கழகத் தோழரோ, குழந்தையை எடுத்து முத்தமிட முடியவில்லை, காரணம், அவருடைய கை, இன்னொரு தோழரின் கையோடு விலங்கினால் பிணைக்கப்பட்டிருந்தது.

பல கழகக் காளையர்களுக்கு, அன்றையத் தினம் தங்கள் துணைவியோடும் தாயோடும், குழந்தைகளுடனும் மகிழ்ச்சியோடு பேசும் சந்தர்ப்பம் கிட்டியது.

அன்றையத் தினம், 25 தோழர்கள் ஜாமீனில் விடப்பட்டனர். பின்னர், வழக்கு 20—10—53-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

தோழர்கள் அபிசேக மன்சூர், ரத்தினம், தாளமுத்து ஆகியோர் கழகத் தோழர்களின் தேவையைப் பூர்த்தி செய்துகொண்டிருந்தனர்.

தோழர்கள் நாராயணன், தனராஜ், கடவுள் தலைவன் ஆகியோரும் ஒத்துழைத்தனர்.

பின்னர், மாலை 5 மணிக்கெல்லாம் தூத்துக்குடித் தோழர்கள் விடைபெற்றுக் கொண்டு, திருச்செந்தூர், மதுரை, சாத்தான்குளம் முதலிய சிறைச் சாலைகளுக்கு போலீசார் புடைசூழ பிரிந்து சென்றனர்.

தோழர் கே. வி. கே. சாமி அவர்கள், உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தபோதிலும், மகிழ்ச்சியுடன் விடைபெற்று, கழகத்தைக் கட்டிக் காக்குமாறு கூறிவிட்டு, திரும்பவும் பாளையங்கோட்டை ஆஸ்பத்திரிக்குச் சென்றார்.

தோழர்கள் தங்கப்பழம், சிவசாமி, நடராசன் ஆகியோர் மலர்ந்த முகத்தோடு விடைபெற்றுக் கொண்டு, விளாத்திகுளம் சிறைக்குச் சென்றனர்.

பின்னர் நகரத் தோழர்கள், ஜாமீனில் வெளியில் வந்த தோழர்களை வரவேற்று உண்டி கொடுத்து, தேவையான பிரயாண வசதிகளையும் செய்துகொடுத்து, தூத்துக்குடிக்கு வழியனுப்பினர்.

எல்லாத் தோழர்களும் மகிழ்ச்சியுடனேயே காட்சியளித்தனர். மீண்டும் 20—10—53 அன்று நெல்லை நீதிமன்றத்தில் சந்திப்பதாகக் கூறி அனைவரும் விடைபெற்று சென்றனர்.

உயர் பார்ப்பன...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தான் பழைய ஆட்சி முறையிடம் உங்களுக்கு விசுவாசம் இருந்தது. அதே விசுவாசத்தை, தற்போதைய ஆட்சியிடமும் காட்டுகின்றீர்கள்."

இப்பொழுது இல்லாத தன்மை!

"ஏதாவது ஒன்றைப் பெற வேண்டுமானால், மற்றொன்றை இழக்கவேண்டுமென்பது இயற்கை விதி. எல்லோரும் ஒன்றுபட்டுவிட்டால், விசுவாசத்துக்கு அவசியமில்லை. விசுவாசம் என்பது ஒரு வகையான 'கோளாறுக்கு' மருந்தேயாகும். தங்களுடைய சர்க்காரை ஆதரிக்க வேண்டியது பிரஜைகளின் சகஜமான தன்மையாக இருத்தல் வேண்டும்."

கைதேர்ந்த விஷமம்!

"ஒரு சிலர் நாட்டை ஆட்சி புரிந்தால், அவர்களிடையே அபரிமிதமான அதிகாரம் இருக்கிறது. ஆனால், நமது சுதந்திரக் குடியரசுநாட்டைப் போல் அதிகாரம் எல்லா மக்களிடமும் விநியோகிக்கப்பட்டுவிட்டால், ஒவ்வொருவருக்கும் ஒரு வோட் இருப்பதால்; அதிகாரத்தின் அளவு, குறைவு படுகிறது. ஆதலின், ஆங்கிலோ இந்தியர்கள் தங்களுக்கு அதிகாரம் மிகவும் சொற்பமாயிருக்கிறது என்று நினைத்தால், 30 கோடி மக்களிடையே அதிகாரம் பரவியிருப்பது தான் அதற்குக் காரணம்!"

தந்திரத்தால் பெற்றது நிற்காது!

"தந்திரங்களினாலும், இரகசிய வேலைகளினாலும் சிலர், அதிகாரம் பெறலாம், என்று நினைக்கலாம். ஆனால், அது நிரந்தரமாய் இருக்காது."

★★★★★★★★★★★★★★★★★★

வாழ்க்கை ஒப்பந்தம்

★

மணமகன்: மீ. இராமச்சந்திரன்
மணமகள்: க. மனோரமாதேவி

11—10—53 ஞாயிறு காலை 9 மணி அளவில், தோழர் க அன்பழகன், எம். ஏ., அவர்கள் தலைமையில், சென்னை, பெரம்பூர், இராசவேலு முதலித் தெரு, 24-ம் எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும். புலவர் நன்னன் அறிவுரை ஆற்றுவார்.

★★★★★★★★★★★★★★★★★★

மதுரை தோழர்கள் மீது வழக்கு

எஸ். முத்து, அய்யாசாமி உட்பட அனைவரும் ஜாமீனில் விடுதலை

மதுரை, அக் 8—

நேரு பண்டிதர் மதுரை வந்தபோது அவர்களுக்குக் கருப்புக்கொடி காட்டிய மதுரை தி. மு. கழக தோழர்கள் எஸ். முத்து, எம். அய்யாசாமி, எம். ஆர். கணேசன் மற்றும் 28 தோழர்கள்மீது போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

இரண்டு தினங்களுக்குமுன் கைது செய்யப்பட்ட தோழர்கள் முத்து, அய்யாச்சாமி, இராசமான் உட்பட 16 தி. மு. கழக தோழர்களை நேற்று ஜாமீனில் விடுதலை செய்ய நீதிபதி உத்தரவிட்டார்.

சென்னையில் ஆச்சாரியாருக்கு கருப்புகொடி

சி. ஆர். பாலசுந்தரம், வி. முனுசாமி கைது செய்யப்பட்டனர்

சோமசுந்தரம், பலராமன் இருவருக்கும் ஒரு மாத கடுங்காவல் தண்டனை

சென்னை, அக்டோபர் 9—

நேற்று மாலை 6 மணிக்கு சென்னை ஏழுகிணறு ஆஞ்சனேயர் கோவிலுக்கு முன் நடந்த காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் ஆச்சாரியார் பேசுவதாக விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது.

9-வது வட்ட தி. மு. கழக கிளை கழகத்தின் சார்பாக ஆச்சாரியாருக்குக் கருப்புக்கொடி காட்டுவதென முடிவு செய்து அதன்படி கருப்புக்கொடி காட்டுவதற்காக மக்கள் கூடியிருந்தனர்.

மாலை 6–15 மணிக்கு, ஆச்சாரியார் கூட்டத்திற்கு வந்ததும் — காங்கிரஸ்காரர்கள் 'ராஜாஜி வாழ்க' என்ற கோஷமும், 'ஆச்சாரியார் வீழ்க' என்ற கோஷமும் சுமார் 5 நிமிஷம் இருந்தது

கூட்டத்திற்கு பக்தவத்சலம் தலைமை தாங்கினார். இரண்டு பேச்சாளர்கட்கு பிறகு ஆச்சாரியார் பேச எழுந்தார். கூட்டத்தில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது. ஆச்சாரியார் தொடர்ந்து பேசும்போது, "நேரு சென்னை வரும்போது பெருவாரியான மக்கள் வரவேற்கும்போது ஒரு சிலர் அறிவீனமாக வெட்கத்துடன் முகத்தை மறைத்துக் கொண்டு கருப்புக் கொடி காட்டினர்" என்று கூறி முடிப்பதற்குள் — கையில் கருப்புக் கொடியை வைத்திருந்த தோழர் பலராமன் உடனே எழுந்து ஆச்சாரியாருக்கு கருப்புக் கொடியைக் காண்பித்தார். அதை ஆச்சாரியார் கையில் பெற்றுக் கொண்டார். உடனே கூட்டம் குழப்பம் ஏற்பட்டு மீண்டும் ஆச்சாரியார் பேச 20 நிமிஷ நேரமாய்விட்டது. அதன் பிறகு பலராமன், சோமசுந்தரம் ஆகியவர்களை கைது செய்து அவர்கள் மீது வழக்கு பதிவு செய்து, இன்று கோர்ட்டில் அவர்களுக்கு சென்னை போலீஸ் சட்டம் 75 பிரிவும்படி 1 மாதக் கடுங்காவல் தண்டனையும், 6 மாத நன்னடக்கை ஜாமீனும் தரவேண்டுமென உத்திரவிட்டனர். தோழர்கள் சிறை சென்றனர். —ந. நி.

குறிப்பு:— (கருப்புத் துணி காட்டிய இளைஞரை ஜாக்கிரதையாக வெளியே கொண்டுபோய் விடும்படி போலீஸ்காரர்களிடம் ராஜாஜி தெரிவித்தார்.)

(தினமணி 9—10—53 காலை பதிப்பு)

★

தோழர்கள் பாலசுந்தரம், முனுசாமி கைது

தோழர் சி. ஆர். பாலசுந்தரம், வி. முனுசாமி இது சம்பந்தமாக நேற்று பகலே கைது செய்யப்பட்டு காவலில் இருக்கின்றனர். அவர்களின் இல்லங்கள் போலீசாரால் சோதனை செய்யப்பட்டிருக்கிறது. இருவரும் 151-வது சட்டப்படி காவலில் வைத்திருப்பதாகத் தெரிகிறது.

ஆச்சாரியார் 'திறமை'க்கு ஓர் 'நற்சாட்சிப் பத்திரம்!'

தஞ்சை பண்ணையாள் சட்டத்தை மட்டந் தட்டுகிறார் அமெரிக்கப் பேராசிரியர்

புதுடெல்லி, அக். 7—தஞ்சை மாவட்டத்தில் ஆச்சாரியார் சர்க்காரால் அமுல் நடத்தப்படுகின்ற பண்ணையாள் சட்டத்திலுள்ள குறைகளை சுட்டிக் காட்டி இந்திய சர்க்காரிடம் அமெரிக்க விவசாயப் பொருளாதார நிபுணரும், அமெரிக்க சர்வகலாசாலை ஒன்றைச் சேர்ந்தவருமான பேராசிரியர் லாடஜன்ஸ்கி என்பவர் ஒரு ரிபோர்ட் சமர்ப்பித்துள்ளார்.

சர்க்காரின் அழைப்பின் பேரில், இந்தியாவிற்கு வந்து, பல்வேறு மாகாணங்களின் விவசாயப் பொருளாதார நிலைமைகளை ஆராய்ந்து, பெரியதொரு அறிக்கை அனுப்பியிருக்கிறார்.

அந்த அறிக்கையில், தஞ்சை பண்ணையாள் சட்டத்தைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:—

"நிலப் பிரபுக்களுக்கும், விவசாயிகளுக்கு மிடையே சமூக உறவை வளர்க்கும் நோக்குடன் பிறப்பிக்கப்பட்ட தஞ்சை பண்ணையாள் சட்டம், அதன் குறிக்கோளை நிறைவேற்றக் கூடியதாக இல்லை. அடிப்படை குடிவாரம், குத்தகை கால நிர்ணயம்பற்றிய ஷரத்துக்கள் போதிய உத்தரவாத மளிக்கக்கூடியதாக இல்லை. இந்தச் சட்டத்தை விவசாயிகளுக்கு அளித்த சிறு சலுகை எனலாம். குத்தகைக்காரர்கள், உழவர்கள் நிலச்சுவான்தார்கள் அனைவருமே தஞ்சை பண்ணையாள் சட்டத்தைக் குறை கூறுகிறார்கள்.

அறுவடை செலவு தவிர, ஏனைய செலவுகள், விவசாயிகளின் தலையிலேயே சுமத்தப்பட்டிருக்கிறது. விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதைத் தடுக்க சட்டத்தில் உள்ள ஷரத்து பலமுள்ளதாக இல்லை. இந்த ஷரத்தைக் காட்டி ஏமாற்றி, ஏழை விவசாயிகளை நிலப்பிரபுக்கள் வெளியேற்ற வழி உள்ளது. மொத்தத்தில் இந்தச் சட்டத்தினால் விவசாயிகளின் அச்சம் ஒழிக்கப்படவில்லை —கவலை நீக்கப்படவில்லை," என்று குறிப்பிட்டுள்ளார்.

பிறப்பு

சேலூர் தி. மு. கழகத் துணைச் செயலாளர் டி. டி. வேதபுரி அவர்களின் துணைவியார் தோழியர் சரசுவதி அவர்களுக்கு 27—9—53ல், ஆண் மகவு பிறந்தது. அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு, ரூ 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றியுடையது—பொறுப்பாளர்.

* * *

சென்னை 1-வது வட்ட தி. மு. கழக செயலாளர் தோழர் பா. ம. கிருட்டிணன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் செந்தாமரை அம்மையாருக்கு 24—9—53ல் பெண் மகவு பிறந்தது. தாயும் சேயும் நலம். குழந்தைக்கு 2-10-53ல் சாவித்திரி என்று பெயர் சூட்டப்பட்டது.

சிங்கப்பூர், அக் 6—சீனர் குழந்தைகளையும், இங்கு வசிக்கும் தென்னிந்தியர் குழந்தைகளையும் உடல் சத்து ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து பார்த்ததில், சீனர் குழந்தைகளே சீக்கிரம் நல்ல வளர்ச்சி பெறுவதாக அறிவிக்கிறார்கள்.

ஏழுகிணறு 9-வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம்

10-10-53 இரவு 9 மணிக்கு, சென்னை, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு, 179-ம் எண்ணுள்ள இல்லத்தில் மேற்படி கூட்டம் கூடும். அதுபோது கழக எதிர்கால ஆக்க வேலைகள், செயலாளர் விலகுதல், மற்றும் சில முக்கிய விஷயங்களைப் பற்றி விவாதிக்கப்படும். கழக உறுப்பினர்கள் யாவரும தவறாமல் மேற்படி கூட்டத்திற்கு வரும்படி, துணைச் செயலாளர் டி. ஜி. சாமி அறிவிக்கிறார்.

கழகத் தோழர்களுக்கு

தோழர் எஸ். என். பி லிங்கம், கல்வித் திட்ட மறியலில் கைதாகி விடுதலையானது பற்றி, அவர் கீழ்க்கண்ட அறிக்கையை விடுத்துள்ளார்:

ஜூலை 14-ல், ஆச்சாரியார் வீட்டுமுன், நடைபெற்ற கல்வித் திட்ட மறியலில் நானும் பங்கு கொண்டு, கைது செய்யப்பட்டேன்.

அரசாங்க ஆணைபடி 17-7-53ல் எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்பட்டேன். நிற்க,

பிறகு, என்னோடு கைதான காஞ்சிபுரம் கவுன்சிலர் தோழர் இராசகோபால் அவர்கள், வழக்கு மன்றத்தில், 8-8-53ல், "எங்களோடு கைதான தோழியர் சத்தியவாணிமுத்துவையும் தோழர் எஸ். என். பி. லிங்கம் அவர்களையும் விடுதலை செய்தது ஏன்?" என்று நீதிபதியைக் கேட்டதற்கு, அது "கமிஷனரின் ஆணை" என்று பதில் தரப்பட்டுள்ளது. என் வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இப்படி இருக்க, நான் 'ஜாமீனிலோ, மன்னிப்புக் கேட்டோ வெளி வந்திருக்கிறேன்' என வதந்தி உலவத் தெரியலானேன். வேதனைப் படுகிறேன். சர்க்காரே என்னை வெளியே 'அனுப்பிற்றே' தவிர, நான் எவ்வித நிபந்தனைக்கும் உட்பட்டு வெளிவரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், வணக்கம்.

கழகக் கூட்டங்கள்

★

புதுக்கோட்டை

11—10—53 ஞாயிறு மாலை
தலைவர்: ச. கு. சங்கரலிங்கம்
பேசுபவர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி

★

திருச்சி

11—10—53 காலை 9 மணிக்கு
இடம்: தேவர் மன்றம்
தலைவர்:
வி. எஸ். சிவப்பிரகாசம், பி. ஏ.
பேசுவோர்:
ப. உ. சண்முகம்
அ. ரா. கலீல்
என். எஸ். இளங்கோ
சிற்றுளி-சுப்ரமணியம்
ஏ. பி. தர்மலிங்கம்
எம். எஸ். மணி
எஸ். நெமோறன்

★

முருகன்குடி

11—10—53 ஞாயிறு மாலை
தலைவர்: ஏ. கந்தசாமி
பேசுவோர்:
ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.
ஆர். பாலகுருசாமி
தோழியர் பூங்கோதை
என். உத்திராபதி

★

திண்டுக்கல்

11—10—53 ஞாயிறு மாலை 6 மணிக்கு
இடம்: வ. உ. சி. திடல்
தலைவர்: எஸ். பி. தாண்டவம்
பேசுவோர்:
சேலம்-கலைப்பித்தன்
என். முத்து
பி. சமதர்மம், எம்.சி.
ஏ. சுப்பையா

தோழர் இராமனுதன்

லயோலா கல்லூரி திராவிட மாணவர் தோழர் ஆர்.எம். இராமனுதன் தமிழ்ப் பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ள டிசம்பர் மாதம் இலங்கை செல்வார். முழு விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

நடிப்புப் புலவர் **கே. ஆர். ராமசாமி** அவர்களும்
அவர் தம் குழுவினரும் நடிக்கும்
சி. என். அண்ணாதுரை தீட்டிய

காதல் ஜோதி

நாடகம்
நாடக டைரக்ஷன்: முத்துகிருஷ்ணன்

★

சென்னை
ஒற்றைவாடை தியேட்டரில்
17-10-53 சனி இரவு 9-30 மணிக்கும்
18-10-53 ஞாயிறு மாலை 6-30 ,,
நடைபெறும்

"நம் நாடு" வெளியூர் ஏஜண்டுத் தோழர்கட்கு

'நம் நாடு' வெளியூர் ஏஜண்டுத் தோழர்கள், பழைய பாக்கியும், செப்டம்பர் மாத பில் பாக்கியும் 10—10—53-ல், இங்கு, ரூபாய் வந்து சேராவிட்டால், 10—10—53-ல் பத்திரிகை அனுப்புவது நிறுத்தப்படும். ஒரு சில ஏஜண்டுகள், தங்கட்குப் பாக்கி வருவதாகவில்லை. திடீரென்று பத்திரிகை நிறுத்தினால், தொடர்ந்து 'நம் நாடு' பத்திரிகை படிப்பவர்கட்கு ஏமாற்றம் ஏற்படுகின்றது என்றும், கட்சி வளர்ச்சியைக் கருதி, தொடர்ந்து பத்திரிகை அனுப்பிவர வேண்டுமே தவிர, நிறுத்தக்கூடாது என்றும் கழக வளர்ச்சி முக்கியமா? பணம் முக்கியமா என்றும் வருத்தத்துடன் கடிதம் எழுதுகிறார்கள். ஆகவே, செப்டம்பர் மாத பில் பாக்கிகள் 10—10—53-க்குள் அனுப்பிவைக்கும்படி, 3, 4 தடவைகள் அறிக்கைகள்விட்ட பிறகுதான, இறுதியில் பத்திரிகை நிறுத்த வேண்டிய நிலைமைக்குக் கொண்டுவந்துவிடுகிறார்கள். 'நம் நாடு' நிர்வாகத்திற்குக் கட்சி வளர்ச்சியும் முக்கியம் தான்; அதே சமயம் (பணம்) ரூபாயும் முக்கியம்தான் என்று கூற விரும்புகிறோம் ஏஜண்டுத் தோழர்களும், 'நம் நாடு' மாத சந்தா பாக்கியுள்ள தோழர்களும், தங்கள் பொறுப்பை உணர்ந்து, பாக்கி ரூபாயை உடனுக்குடன் கொடுத்து, ஆதரவளிக்க வேண்டுகிறோம். வெளியூர் ஏஜண்டுத் தோழர்கள், பாக்கியை 10—10—53-க்குள் கிடைக்கும்படி இங்கு அனுப்பாவிட்டால், கண்டிப்பாக பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவைக்கப்படும். பிறகு வருத்தப்பட்டுக்கொள்வதினால் பயனில்லை என்பதாகவும் தெரியப்படுத்திக்கொள்கிறோம்.

இராயபுரம், சென்னை-13
9—10—53

பொறுப்பாளர்,
"நம் நாடு."

தி. மு. கழக செயற்குழுக் கூட்டங்கள்

திருவண்ணாமலை

தோழர் ப.உ.சண்முகம் அவர்கள் தலைமையில், 4—10—53ல் கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், தமிழ்ப்பெரியார் திரு. வி. க. மறைவு குறித்து அனுதாபத்தை தெரிவிததும், திருவண்ணாமலைக்கு கார்த்திகை மாதம் வரவிருக்கும் சென்னை கவர்னர் பிரகாசாவுக்கு கருப்புக்கொடி காட்ட தீர்மானித்தும், நேரு பண்டிதருக்கு எதிராக சென்னையில் நடைபெற்ற கருப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தை காட்டுமிராண்டிகளின் செய்கை என்று குறிப்பிட்ட நேருவைக் கண்டித்தும், தி. மு கழகத் தலைவர்களை சிறையில் அடைத்துவைத்திருக்கும் ஆச்சாரியாரின் அரசாங்கத்தை வன்மையாகக் கண்டித்தும், அத்துக்குடி தோழர்கள்மீது ஆச்சாரியாரின் அரசாங்கத்தாரால் தொடரப்பட்டிருக்கும் சதிவழக்கை எதிர்த்துப் போராட திருவண்ணாமலை தி. மு. கழக சார்பில் நிதி திரட்டி அனுப்புவதெனவும் தீர்மானங்கள் நிறைவேறியது.

பம்பாய்

பம்பாய், அக். 6—2—10—53ல், கழகப் பணிமனையில், செயற்குழுக் கூட்டம் தோழர் செழியன் தலைமையில் நடைபெற்றது. கடந்த கூட்ட நிகழ்ச்சியும் கடித போக்குவரத்துகளும் துணைச் செயலாளரால் வாசிக்கப்பட்டது பல தீர்மானங்கள் நிறைவேறின.

• • •

பம்பாய் தி. மு க. தோழர்களுக்கு

செயற்குழுவில் 4 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டியிருப்பதால், செயற்குழுவிலிருந்து பணியாற்ற விரும்பும் தோழர்கள் 12—10—53-க்குள் தங்கள் மனுவை செயலாளரிடம் சமர்ப்பித்துவிடவேண்டுகிறோம். தேர்தல் கூட்டம் 17—10—53ம் தேதியன்று காலை 9-30 மணியளவில் பணிமனையில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் வருகை தர விழைகிறோம் என்று, செயலாளர் தோழர் எம். என். செழியன் தெரிவிக்கிறார்.

பொய்சர் (பம்பாய்)

பம்பாய், அக். 6—2—10—53-ல் தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் தோழர் அ. சே. அருணசலம் தலைமையில் நடைபெற்றது. பல தீர்மானங்கள் நிறைவேறின.

உதகை

2—10—53-ல், உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. கூட்ட ஆரம்பத்தில் அத்துக்குடி, கல்லக்குடி போராட்டங்களில் ஈடுபட்டு உயிர் நீத்த உத்தமர்களுக்கும், தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களின் மறைவு குறித்தும் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளும் வகையில் இரண்டு நிமிடம் மவுனமாக இருந்தனர். பின்னர் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காங்கேயம்

5—10—53-ல், நகர தி. மு. கழகக் கிளையின் செயற்குழு கூட்டம், தோழர் கே. வி. முத்தியாலு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், நேருவுக்குக் கருப்புக்கொடி காட்ட காங்கேயம் கிளையின் சார்பாக தோழர்கள் கே. வி முத்தியாலு, ப. செல்லத்துரை ஆகியோர் சென்று வந்ததற்கு மகிழ்ச்சி தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

பெரியகுளம்

27—9—53-ல், தி. மு. கழக செயற்குழு கூட்டம் தோழர் இராதாகிருஷ்ணன் தலைமையில், வடகரை காளாஸ்திரி அவர்களின் தோப்பில் கூடியது. பல கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஏஜண்டுகள் தேவை

'நம் நாடு', கீழ்க் கண்ட இடங்களில் விற்பனைசெய்ய முன் பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை நிபந்தனைக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்; ஏஜண்டு விண்ணப்ப பாரம் அனுப்பி வைக்கின்றோம்.

பெரியகுளம்
உடுமலைப்பேட்டை
கோடைக்கானல்
ஸ்ரீவைகுண்டம்
பாபநாசம்
பேராவூரணி
புவனகிரி
கல்லக்குடி
கோள்ளிடம்
ஆனைமலை

பொறுப்பாளர்,
"நம் நாடு,"
இராயபுரம், சென்னை-13.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா.நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ